# பெறுகைக்கான அறிவித்தல் - (IFB – 2024/02)

## மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

## வடக்கு மாகாணம்

### பொருட்கள் சேவைகளுக்கான பெறுகைகள் - 2024

தலைவர், திணைக்கள பெறுகைக்குழுவினால் (பெரிது) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு பொருட்கள் சேவையை வழங்குவதற்கு தகமையுள்ள விலை மனுதாரரிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

தேவையான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| இல | விபரம் | கேள்வி அடையாள இலக்கம் | மீளளிக்கப்பட முடியாத வைப்பு | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | Dog Sterilization Programme - 2024 | NP/21/05/Pro/Dog Sterilization /2024 | 3,500.00 | 140,000.00 | 13th Nov.2024 |

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாகவே கோரப்படுகின்றது.
2. இவ்விலைமனுக் கேள்வி கோரலானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. ஒப்பந்த அளிப்பிற்கு தகமை பெறுவதற்கு விலை மனுதாரர் கேள்வி ஆவணத்தின் பகுதி 2இல் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத்தகமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடமாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதுடன் 2024.06.25ம் திகதி தொடக்கம் 2024.07.15ம் திகதி வரை அலுவலக நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையும் கேள்வி ஆவணங்களைப் பார்வையிட முடியும் என்பதோடு எழுத்து மூலமான கோரிக்கையின் பேரில் அட்டவணையில் காட்டப்பட்டவாறான மீளளிக்கப்பட முடியாத தொகையைச் செலுத்தி ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் தொகுதி ஒன்றைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.
5. கேள்விதாரரகள் கேள்வி ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல் பிரதி என தனித்தனி உறையிட்டு தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடமாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2024.07.16ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதார்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
6. இவ்விலைமனுக் கோரலினை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலை மனுக்கோரலினை இரத்துச் செய்வதற்குபெறுகைக்குழுத் தலைவருக்கு பூரண அதிகாரமுண்டு.
7. மேலே அட்டவணையில் காட்டப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.


தலைவர்
திணைக்கள பெறுகைக்குழு (பெரிது)
மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,
வடமாகாணம்,
சுகாதாரக் கிராமம்,
பண்ணை, யாழ்ப்பாணம்

Telephone: **021-222-0839, 021-222-0819** Fax: **021-222-0818** Email: capdhsnp@gmail.com